# காலிங்கராயன் நாள் விழா

## தை—5




செயற்கு அரிய செய்வார்பெரியர் சிறியர்
செயற்கு அரிய செய்கலாதார். (குறள் - 26)

அன்பார்ந்த காலிங்கராயன் பாசனப்பகுதி பகுதி வாழ் விவசாயிகளே, விவசாயத் தொழிலாளர்களே, பொதுமக்களே வணக்கம் !

நம் வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் காலிங்கராயன் அணைகட்டி, கால்வாய் வெட்டி முடிக்கப்பட்ட நாள் தை மாதம் 05 கி.பி. 1282 ஆகும். (காலிங்கராயன் கால்வாய் - கல்வெட்டு தொல்லியல் அறிஞர் செ. ராசு நூல்) இன்றைக்கு 735 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கால்வாய் பாசனத்தை உருவாக்கி நமது பகுதியை வேளாண்மை வளம் கொழிக்கச் செய்த பெருமை நமது பெருமதிப்பிற்குரிய பெருமகனார் **"லிங்கையன் (எ) காலிங்கராயன் "** அவர்களையே சேரும். 56 ½ மைல் (90.0 கி.மீ) நீளத்திற்கு கால்வாய் வெட்டி,

786 மதகுகளின் மூலம் 15743 ஏக்கர்களுக்கு நன் செய் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்தவர் நமது தலைமகன் காலிங்கராயன் அவர்கள் ஆவர்.

, இந்த மாபெரும் பணி அணைகட்டி, கால்வாய் வெட்டி பாசன வசதிகளை ஏற்படுத்துவது என்பதோடல்லாமல், பவானி ஆற்றையும், நொய்யல் ஆற்றையும் இந்தக் கால்வாய் மூலம் இணைத்துள்ளார். மேலும் நொய்யல் ஆற்றிலிருந்து அமராவதி ஆறு வரை கால்வாய் வெட்டி இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளார் என்பதை நொய்யல் ஆற்றில் உள்ள 'ஓட்டை அணை' போன்ற எச்சங்கள் காட்டுகின்றன. இவ்வாறு ஆறுகள் இணைப்பின் முன்னோடியாகவும் திகழ்கிறார். இத்துடன் காலிங்கராயன் அணைக்கட்டும், கால்வாயும் கட்டுமான பொறியியல், நீர்பாசன பொறியியல், புவியியல் தொழில் நுட்பம் உள்ளிட்ட மாபெரும் தொழில் நுட்ப அறிவு வளத்தை நவீன அறிவியல் வளர்ச்சி பெறாத காலகட்டத்தில் இருந்ததை நமக்கு வெளிப்படுத்திக் கொண்டுள்ளன.

**"உணவுப் பொருளை விளைவித்து உயிரைக் காக்கும் பெருமக்கள் பணிக்காக எவர் நிலத்தோடு நீரைச் சேர்க்கும் முயற்சியை மேற்கொள்கிறாரோ அவர் புகழ்தான் உலகில் என்றும் நிலைத்து நிற்கும்"**

என்று சங்கப்புலவர் குட புலவியனார் பாடியுள்ளதாக கல்வெட்டு - தொல்லியல் அறிஞர். திரு. செ. ராசு தனது "காலிங்கராயன் கால்வாய்" என்ற நூலில் குறிப்பிடுவார். இது நமக்கு வாழ்வாதாரத்தை

ஏற்படுத்திக் கொடுத்த பெருமதிப்பிற்குரிய தலைமகன் "லிங்கையன் (எ) காலிங்கராயன்" அவர்களுக்கு சாலப் பொருந்தும். இதன் முக்கியத்துவத்தை கடந்த காலங்களில் இல்லையென்றாலும் தற்போதைய வறட்சியில் உணர்ந்து கொண்டுள்ளோம்.

முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய மதிப்பிற்குரிய பொறிஞர். "பென்னி குக்" அவர்களுக்கு தேனி மாவட்டப் பகுதி மக்கள், தை பொங்கலின் போது அவர் நினைவாகப் பொங்கல் வைத்து போற்றுகின்றனர். மேலும் அவர்கள் வீடுகளில் பிறக்கும் குழந்தைகளுக்கும் அவருடைய பெயரை வைத்து நன்றி பாராட்டுகின்றனர்.

நன்றி மறப்பது நன்றுஅன்று நன்றுஅல்லது
அன்றே மறப்பது நன்று. (குறள் - 108)

நாமும் நமக்கு வாழ்வளித்துள்ள பெருமகனார் **"லிங்கையன்** (எ) **காலிங்கராயன்"** அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் **தை 05** ஆம் நாளை **"காலிங்கராயன் நாளாக"** நமது பாசனப் பகுதிகளிலுள்ள அனைத்து ஊர்களிலும் ஆண்டு தோறும் மாபெரும் விழாவாக நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஊர்களில் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த பல ஆண்டுகளாக காலிங்கராயன் அறக்கட்டளையினர் வெள்ளோட்டில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து விழா கொண்டாடுகின்றனர். கடந்த மூன்றாண்டுகளாக பஞ்சலிங்கபுரம், பனப்பாளையம் ஆகிய பாசனப்பகுதி ஊர்களிலும் தை 05-ல் விழா எடுக்கின்றனர்.

## தை – 05 (18.01.2018) வியாழன் அன்று
## விழா நடைபெறும் ஊர்கள்

1. சாத்தம் பூர் – சின்னியம்பாளையம் பிரிவு
2. சாவடிப்பாளையம் புதூர்
3. சாவடிப்பாளையம்
4. பஞ்சலிங்கபுரம்
5. கணபதிபாளையம் நால் ரோடு
6. சோளங்கபாளையம்
7. ஊஞ்சலூர் – காசிப்பாளையம்
8. கருக்கம்பாளையம்
9. கொளத்துப்பாளையம்
10. பனப்பாளையம்
11. தாமரைப்பாளையம்
12. கல்வெட்டுப்பாளையம்
13. ஒத்தக்கடை கணபதிபாளையம்
14. சாலைப்புதூர் – ஆவுடையார் பாறை

இவ்விழாக்களில் பங்கேற்க,
காலிங்கராயன் அவர்களின் வழித் தோன்றல்கள்
**உயர்திரு. அருண்குமார் காலிங்கராயர்** அவர்களும்,
**உயர்திரு. சித்தார்த் காலிங்கராயர்** அவர்களும்,
வருகை தர உள்ளனர்.

## காலிங்கராயன் நாள் – தை 05 விழா குழு

தொடர்புக்கு
**99425 24024, 98435 80010**

அதியமான் அச்சகம், ஈரோடு 98429 25151